**செய்தி வெளியீடு எண்: 537** **நாள்: 11.09.2012**

கலை பண்பாட்டுத்துறை,
சென்னை 600 008.

## செய்திக் குறிப்பு

பல்வேறு துறைகளின்கீழ் இயங்கி வந்த கலை நிறுவனங்களையும், கலைக்கல்வி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து கலை பண்பாட்டுத் துறையை 1991 இல் உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவி திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1000/– பெறுகின்ற திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்கின்ற விண்ணப்பதாரர்களின் ஆண்டு வருமான உச்ச வரம்பை அரசாணை (நிலை) எண்.178, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.1.2)த்துறை, நாள் 24.08.2012 இன் மூலம் ரூ.12,000/– என்பதிலிருந்து ரூ.60,000/– என்பதாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளார்கள்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட வருமான உச்ச வரம்பான ரூ.12,000/– என்பதால் நலிந்த கலைஞர்கள் பலர் நிதியுதவி பெற இயலாமல் வாடுகிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.60,000/– ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே இத்திட்டத்தின்கீழ் உதவி பெறும் நலிந்த கலைஞர்களின் மறைவிற்குப் பின்னர் அவரது கணவர் அல்லது மனைவி பெயருக்கு அந்த நிதியுதவியினை மாற்றி வழங்கும் பொழுதும் இதே வருமான உச்ச வரம்பை கடைபிடித்து அவர்களுக்கும் உதவிபுரிய ஆணையிட்டுள்ளார்கள்.

எனவே, இந்த ஆண்டு முதல் இந்த திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற நிதியுதவியினைப் பெற இயலாமல் இருந்த பல விண்ணப்பதாரர்கள் இதன் மூலம் பயன்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பித்துள்ளோர் இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கலை பண்பாட்டுத்துறை முதன்மைச்செயலாளர் / ஆணையர் திரு.சோ.சு.ஜவஹர், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஒம்). . . . . .
முதன்மைச் செயலாளர் / ஆணையர்.
துணை இயக்குநர்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.